ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஈ) அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் ஆட்சிக் குழுவிற்கு உறுப்பினர் தேர்வு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் ஆட்சிக் குழு உறுப்பினராகப் பணிபுரிய சட்டமன்ற உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன் அவர்களிடமிருந்து முறையான வேட்புத் தாள் வரப்பெற்றுள்ளது.

அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பெற வேண்டிய ஓர் உறுப்பினர் பதவிக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன் அவர்கள் மட்டுமே முறையான வேட்புத் தாள் அளித்துள்ளதால் அவர் அப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். அவரது ஆட்சிக் குழு உறுப்பினர் பதவிக்காலம் மூன்று ஆண்டுகளாகும்.

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர் ஏதாவதொரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அந்நாளோடு பல்கலைக்கழக ஆட்சிக் குழு உறுப்பினர் பதவியும் முடிவடையும்.

9. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

2013 அக்டோபர் 30]

மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“பேரவை விதி 25 (1)—ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறலாம்”

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுகிறது. நன்றி, வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2—34 மணிக்கு, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

40. 2012 ஆம் ஆண்டு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (பொதுக் கட்டடங்களில் கண்காணிப்பு காமராக்கள் பொருத்துதல்) விதிகளை இயற்றியது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறையின் 14—12—2012 ஆம் நாளிட்ட 113 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) 348 (d) பிரிவு, 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவு, 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432(2) பிரிவு, 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431(2) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1994) 11(3) பிரிவு, 1994 ஆம் ஆண்டு